1971 ஜூலை 14]

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, இதிலே குறிப்பிடப் பட்டு இருக்கும் முதலிபாளையம், ஆண்டிப்பாளையம் குளங்களுக்கு நொய்யல் ஆற்றிலிருந்து தண்ணீர் வருகிற முறையில் தூர் எடுக்கப்பட்டால், அது விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயன்படும். அதைச் செய்ய ஆசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எனக்குக் கொடுக்கப்பட்டு இருக்கும் விவரப்படி, அண்மையில்தான் மராமத்து வேலை செய்யப்பட்டிருக் கிறது. எனவே, அந்த வேலை தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

பவானி வட்டத்திலுள்ள வாய்க்கால்கள்

* 235 வினா—**திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பவானி வட்டத்திலுள்ள தடப்பள்ளி வாய்க்கால், அரக்கன்கோட்டை வாய்க்கால், காலிங்கராயன் வாய்க்கால் ஆகிய மூன்றையும் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்த தடப்புள்ளி வாய்க்கால், அரக்கன்கோட்டை வாய்க்கால், காலிங்கராயன் வாய்க்கால் ஆகிய மூன்றையும் புதுப்பிக்கும் திட்டம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது எப்போது செயல்படத் தொடங்கும் ? அதனுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு ? அதனால் மிதமாகும் தண்ணீர் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அரக்கன் கோட்டை வாய்க்காலுக்கான மதிப்பு ரூ. 49.4 லட்சம் தடப்பள்ளி வாய்க்கா லுக்கான மதிப்பு ரூ. 88 லட்சம் காலிங்கராயன் வாய்காலுக்கான மதிப்பு ரூ. 66.01 லட்சம் ஆய்வு முடிந்தபிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப் படும். எவ்வளவு ஆயக்கட்டு பயன்பெறும் என்று இப்போது சொல்வது அவ்வ ளவு சரியில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : இப்போது இந்த வாய்க்கால் வெட்டி சுமார் 200 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. வாய்க்கால்கள் தூர் எடுக்கப்படாமல் இருக்கின் றன. இதனால் கடைநிலைப்பகுதிகளுக்குத் தண்ணீர் வருவது இல்லை. ஆகவே, இதை விரைவாகச் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைமைப் பொறியாளரை ஒரு விரிவான அறிக்கை கொடுக்கவேண்டுமென்று அரசு கேட்டு இருக்கிறது. தலைமைப்பொறியாளரின் ஆய்வில் அது இருக்கிறது. ஆய்வு முடிந்து அறிக்கை வந்தவுடன், தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, நொய்யலாற்றுப் பாசனம் கரூர் தாலுக்காவில் இருக்கும் விவசாயிகள் பல நாட்களாக கேட்டுக்கொண்டு இருக் கிறார்கள். அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன பரிசிலனை செய்து இருக்கிறது ?

[1971 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பவானி ஆற்றைப் பற்றிய கேள்வி. நொய்யலாற்றைப் பற்றிய கேள்வி முடிந்து விட்டது. இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

கோவையில் டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலை

* 236 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

அரசாங்கப் போக்குவரத்துத் துறையின்கீழ் டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலை ஒன்றைக் கோவையில் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதில் சொன்னுர்கள். அரசாங்கப் போக்குவரத்துத் துறை கோவையில் பெரும் அளவுக்குப் பேருந்துகளை நிறுத்தி வைக்கிறது. மேலும் 50 மேற்பட்ட பஸ் நிறுவனங்களை தற்போது தேசியமயமாக்கியுள்ளது. ஆகவே, இப்போதாவது, ஒரு டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுபற்றிப் பின்னர் பரிசீலிக்கலாம்.

THIRU K.M. SUBRAMANIAM : May I know where the tyres of the Transport department vehicles are being retreaded ? Is it being done departmentally ? Is it being given to any contractor ? Or, is there any factiry run by Government for that purpose ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ராணித்தோட்டத்திலும், சென்னையிலும் டயர் ரீட்ரெடிங் யூனிட் போக்குவரத்துத் துறையில் இருக்கிறது. இங்குதான் அது செய்யப்படுகிறது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலை கோவையில் இல்லை என்று சொன்னுர்கள். அத்தகைய தொழிற்சாலை ஒன்று திருச்சியில் ஏற்படுத்தப் போவதாக செய்தி அடிபடுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருச்சி, சேலம் போன்ற பகுதியில் இருக்கிற வண்டிகளுக்காக திருச்சியில் என்ஜின் ரீ-கண்டிஷன் செய்கிற பணியையும், டயர் புதுப்பிக்கும் பணியையும் சேர்த்து ஒரு தொழிற்சாலை நிறுவ அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : தேசியமாக்கப்படும் கொள்கையினுல் அரசாங்கப் போக்குவரத்து விரிவு அடைந்து வருகிறது. விரிவு அடைந்து வருகிற அரசாங்கப் போக்குவரத்து பஸ்களின் எண்ணிக்கைக்கேற்ப மோட்டார் உபபொருள்கள் கிடைக்கவும், டயர் புதுப்பிக்கும் பணி நடைபெறவும் இடையீடின்றி தொடர்ச்சியாக நடைபெற அரசாங்கம் விரும்புகிறதா? அப்படி விரும்பினுல் இதுபோன்ற தொழிற்சாலைகள் எங்கெங்கே ஆரம்பிக்கப்படும் ?